**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 88/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.1 (காஜாமைதீன்)**
**03.11.2025**

**3 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. இவ்வழக்கில் வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆகிய ஆவணங்களில் தாவா சர்வே எண் 242/2 குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அந்த ஆவணங்களில் சர்வே எண் தவறாக எழுதப்பட்டுள்ளது.
2. புல எண் 242/2 தவறாக எழுதப்பட்டுள்ளது என சொல்வதற்கு ஆதாரமாக என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1945 ஆம் வருட கிரைய பத்திர நகல் தாக்கல் செய்துள்ளேன், அதில் தாவா சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், ஆவணம் தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
3. புல எண் 242/2 க்கான புலப்பட நகல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா புல எண்ணின் நான்கெல்லையில் உள்ள சொத்துக்கள் தொடர்பான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.
4. தாவா சொத்திற்கான நான்கெல்லையை உறுதிபடுத்தும் விதத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.
5. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களில் உள்ள நான்கெல்லையும், தாவா சொத்திற்கான நான்கெல்லையும் வெவ்வேறானவை என்றும், அதனால் தான் அதற்கான ஆவணங்களை உள்நோக்கத்துடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.
6. தாவா புல எண் 1 ஆம் பிரதிவாதியின் தகப்பனாருக்கோ, 1 ஆம் பிரதிவாதிக்கோ, ரமிஷாபீவிக்கோ, எனது தகப்பனாருக்கோ, எனக்கோ, எனது குடும்பத்தினருக்கோ பாத்தியப்பட்டதல்ல என்றால் சரியல்ல.
7. தாவா புல எண் 242/2 ஆனது 3 ஆம் பிரதிவாதியின் பாட்டனார் அடைக்ககோனாருக்கு பாத்தியப்பட்டு, நாளது வரை அவரது பெயரில் தான் பதிவுகள் உள்ளன என்றால் சரியல்ல. அதனால் தான் தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.
8. தாவா சொத்தானது பூர்விகமாக 3 ஆம் பிரதிவாதி வகையறாவிற்கு பாத்தியப்பட்டு 3 ஆம் பிரதிவாதியின் அனுபவம் மற்றும் உரிமையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 3 ஆம் பிரதிவாதிக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல.

9. புல எண் 242/13 எனக்கு சொந்தமனாது அல்ல என்று சொல்கிறேன் என்றால் சரிதான். அந்த புல எண்ணை பொறுத்து எனது பெயரில் உள்ள பட்டாவை நீக்குவதற்கு நாளது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நடவடிக்கை எடுத்து, அது முழுமை பெறாத காரணத்தால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேறபடி விவரத்தை வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரம் மற்றும் நான்கெல்லை தவறு என்றும், அதனால் எனது வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

10. எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளபடி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தாவா சொத்தை அளவை செய்ததாகவும், அப்போது புல எண் 242/13 தவறு என்றும், சரியான புல எண் 242/2 என தெரிவித்ததாகவும், சொல்லியுள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

11. காலம் கடந்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனால் எனது வழக்கு காலாவதி தோசத்தில் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

12. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும், எனது வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

S/d– C.Rajesh, B.A.B.L.,
சார்பு நீதிபதி,
கீரனூர்.